THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (P.W.1 )**

Solemnly affirmed and sworn by Tmt.Nagavalli Grade III Bench clerk on 16.09.2022. in accordance with the provisions of Act XX111.

அசல் வழக்கு எண்– 674/2010

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாகஜோதி | தாலுகா | |
| தகப்பனார் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

வா.சா. 1 முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் 7 வது வாதி. வாதிதரப்பு 1 வது சாட்சியாவேன். நான் எனது முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அவை அனைத்தும் உண்மையே.

16.10.1979 ம் தேதியிட்ட 1 மற்றும் 2 வது வாதி பெயரில் உள்ள பட்டா பாஸ் புத்தகத்தின் அசலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**பட்டா பாஸ் புத்தகம் வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) 27.07.1987 ம் தேதியிட்ட 1 மற்றும் 2 வது வாதி பெயரில் உள்ள பட்டாவை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன்.( **பட்டா வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.) 20.04.1981 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதி

பெயரில் உள்ள கிரைய பத்திரத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**20.04.1981 ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) 20.02.1996 ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரைய பத்திரம் எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன்.(**20.02.1996 ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

(வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக இந்த வழக்கு வேறு ஒரு நாளைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)